**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**வத்திராயிருப்பு**
**அசல் வழக்கு எண். 93/2024**

**வா.சா. 1 மாரிமுத்து, S/o சொக்கலிங்கம்.**

**நாள்: 23.02.2026**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தற்பொழுது குடியிருந்து வரும் இடமானது எனது தகப்பனார் எனக்கு எழுதிக் கொடுத்த இடம் என்று சொன்னால் சரியல்ல அது வேறு இடம். வழக்கு சொத்து சம்பந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்தேனா என்றால் இல்லை. நான் வட்டாட்சியரிடம் சமர்ப்பித்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு, அதன் மீது மேல் முறையீடானது சிவகாசி வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து திருத்தம் செய்ய கேட்டு நான் மனு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபன வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்தானது வெயில் முத்து என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்குஇணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு